# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 02 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 5.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ- 45/2006

### தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் 2அ, 2ஆ, 2இ மற்றும் 2ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**2.** இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது அதன் 2ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றதென்பதுடன், அவை, அச்சட்டத்தின் 2அ, 2ஆ 2இ மற்றும் 2ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"செல்லுபடியாக்குதல்.

2அ. தொழில்தருநர் அல்லது ஊழியர் ஒருவர் 1996, பெப்புருவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திற்கு உதவு தொகையொன்றை செலுத்துகின்றவிடத்து, அத்தகைய உதவுதொகை நிதியத்திற்கு செல்லுபடியான முறையில் கழிக்கப்பட்டுள்ளதாக, செய்யப்பட்டுள்ளதாக அல்லது செலுத்தப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

மேலும் நன்மை பயக்கும் வயோதிப வேதன அனுகூலங் களுக்கான அங்கீகாரம்.

2ஆ. (1) இதனகத்துப்பின்னர் "இயைபான தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் மருவிய தொழிலில் ஊழிய ரொருவராகின்ற ஆளொருவர், தொழில்தருநர் களாலும் மற்றும் ஊழியர்களாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறும் ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்தை விட மேலும் நன்மை பயக்கின்ற ஒய்வூதியநிதியமொன்று அல்லது செயற்திட்ட மொன்று என்ற வகையாக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ், விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை, பிரேரிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியம் அல்லது செயற்றிட்டம் திருப்திசெய்கின்றதென தொழில் ஆணையாளர் திருப்தியடையின், வயோதிப வேதன அனுகூலங்களை பெறுவதற்கு உரித்துடையவ ராதல் வேண்டும். அத்தகைய விடயத்தில் தொழில் ஆணையாளர், அத்தகைய நிதியத்தை அல்லது செயற்றிட்டத்தை முறையே அங்கீகரிக்கப்பட்ட உதவுதொகையளி ஓய்வூதிய நிதியமொன்றாக அல்லது செயற்றிட்டமொன்றாக வெளிப்படுத்தல் வேண்டும்.

(2) தொழில் ஆணையாளர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நிதியத்தை அல்லது செயற்றிட் டத்தை அங்கீகரிக்கப்பட்ட உதவுதொகையளி ஓய்வூதிய நிதியமொன்றாக அல்லது செயற்றிட்ட மொன்றாக வெளிப்படுத்துமிடத்து, இயைபான தேதியிலிருந்து அத்தகைய நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்திற்கு செலுத்தற்படற்பாலனவையும் திரட்டப்பட்டவையுமான எல்லா உதவுதொகை களும் செல்லுபடியானமுறையில் செலுத்தப்பட் டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

சந்தேகங் களைத் தவிர்த்தல்.

2இ. (1) சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, 1996, பெப்புருவரி 1 ஆம் திகதிக்கு முந்திய ஏதேனும் காலப்பகுதியின்போது வயோதிப வேதன

அனுகூலங்களை வழங்குவதற்கு அல்லது பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது 2அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பில் எவரேனும் தொழில்தருநருக்கு அல்லது ஊழியருக்கு 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது என இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது.

(2) ஊழியர் ஒருவர் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் தவிர்ந்த ஏதேனும் சகாய நிதியத்தின், ஓய்வூதிய நிதியத்தின் அல்லது வேறு ஏதேனும் வயோதிப வேதன நிதியத்தில் அல்லது செயற்றிட்டத்தில் உறுப்பின ரொருவராக வருமிடத்து அல்லது அத்தகைய எதற்கும் உதவு தொகையொன்றை செலுத்தியுள்ள விடத்து அத்தகைய உறுப்பாண்மையும் கொடுப் பனவுகளும் விடயத்துக்கேற்ப, எத்தேதியில் அவ்வூழியர் ஓர் உறுப்பினராக வருகின்றரோ அல்லது உதவு தொகையைச் செலுத்துகின்றாரோ அத்தேதியிலிருந்து செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண் டும்.

ஏதேனும் அங்கீகரிக்கப் பட்ட சகாய நிதியம் முதலிய வற்றுக்கு உதவு தொகையைத் தொடர்ந்து செலுத்துதல்.

2ஈ. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, இச்சட் டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் –

(அ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் தவிர்ந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத் துக்கு, ஓய்வூதிய நிதியத்துக்கு அல்லது வேறேதேனும் வயோதிப வேதன நிதியத் துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் உதவுதொகை செலுத்தியுள்ள தொழில்தருநர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர், அத்தகைய

நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்குத் தொடர்ந்தும் உதவுதொகை செலுத்துவதும்; அத்துடன்

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் தவிர்ந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத் துக்கு, ஓய்வூதிய நிதியத்துக்கு அல்லது வேறேதேனும் வயோதிப வேதன நிதியத் துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு இச்சட்டம் தொடங்கிய பின்னர் எவரேனும் தொழில் தருநர் அல்லது ஊழியர் உதவுதொகை செலுத்துவதும்,

சட்டமுறையானதாதல் வேண்டுமென மேலும் வெளிப்படுத்தப்படுகின்றது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆறு மாதங்களுக்கு மேற்படாத" மற்றும் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்டாத" மற்றும் "பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்